# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
# இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண் – 25

## அறிவிப்புகள்
## 2015–2016

**பி. தங்கமணி**
தொழில் மற்றும்
போக்குவரத்துத் துறை அமைச்சர்

# பொருளடக்கம்


| வ.எண். | அறிவிப்புகள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆர்.கே.நகரில் சொந்தக் கட்டடம் கட்டுதல். | 5 |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம் – சோழிங்கநல்லூரில் சிறை பிடிக்கப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைத்தல். | 7 |
| 3. | போக்குவரத்துத் துறையின் 81 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பெறப்படும் அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்ய அதிநவீன ஆவண வருடுபொறி (ஸ்கேனர்) வழங்குதல். | 9 |
| 4. | போக்குவரத்துத் துறையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு யுபிஎஸ் (10 KVA Capacity) வழங்குதல். | 11 |
| 5. | கரூர் மாவட்டம் – மண்மங்கலம், திருவள்ளூர் மாவட்டம் –திருத்தணி, திருவண்ணாமலை மாவட்டம் – செய்யாறு மற்றும் மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி ஆகிய புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு 4 புதிய ஈப்புகள் வழங்குதல். | 12 |
| 6. | போக்குவரத்துத் துறையின் ஆணையர் அலுவலகம் மற்றும் சரக அலுவலகங்களுக்கு வருடுபொறியுடன் (ஸ்கேனர்) கூடிய 16 நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல். | 14 |

1. **சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆர்.கே.நகரில் சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of own building at R.K.Nagar for Regional Transport Office, Chennai (North East).**

போக்குவரத்துத் துறையில் 81 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 45 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், 2 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் வழங்கும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, கழிவறை, கட்டண மேடை, வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் போன்ற வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம், சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கட்டுவது அவசியமாகிறது.

எனவே, தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூபாய் 2 கோடி செலவில் ஆர்.கே. நகரில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

**2. காஞ்சிபுரம் மாவட்டம் – சோழிங்கநல்லூரில் சிறை பிடிக்கப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைத்தல்.**

**Construction of Protection Wall for the Vehicle detaining yard at Regional Transport Office, Sholinganallur in Kancheepuram District.**

சென்னை மாநகரில் போக்குவரத்துத் துறை செயலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் வாகனத் தணிக்கையில் பல்வேறு குற்றங்கள் கண்டறியப்பட்டு, சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டு சிறைபிடிக்கப்படும் வாகனங்கள் சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள 7 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுத்தி வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சிறைப்பிடிக்கப்படும் வாகனங்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அவ்விடத்தில் பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைப்பது அவசியமாகிறது.

எனவே, சோழிங்கநல்லூரில் சிறை பிடிக்கப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூபாய் 2 கோடி செலவில் பாதுகாப்பு சுற்றுச் சுவர் கட்டப்படும்.

**3. போக்குவரத்துத் துறையின் 81 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பெறப்படும் அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்ய அதிநவீன ஆவண வருடுபொறி (ஸ்கேனர்) வழங்குதல்.**

**Supply of Heavy Duty Document Scanner for 81 Regional Transport Offices to scan documents.**

போக்குவரத்துத் துறையில் நாளுக்கு நாள் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் புதிய வாகனப் பதிவு தொடர்பான ஆவணங்கள் நிரந்தர முடிவாக, பதிவறையில் வைத்து பாதுகாக்கப்படுகிறது. வாகன பெருக்கத்தினால் ஆவணங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது மற்றும் பதிவறையில் பாதுகாக்க அதிக இடம் தேவைப்படுகிறது. எனவே இந்த ஆவணங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்கும், மேலாய்வின்போது உடனுக்குடன் தகவல் மற்றும் நகல் அளிக்க ஏதுவாக, போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் பெறப்படும் புதிய வாகனப்பதிவு தொடர்பான ஆவணங்கள் மற்றும் முக்கிய கோப்புகளையும் அதிநவீன ஆவண வருடுபொறி (ஸ்கேனர்) மூலம் கணினியில் சேமித்து வைப்பது அவசியமாகும்.

எனவே, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூ.1.44 கோடி செலவில் போக்குவரத்துத் துறையில் உள்ள 81 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு அதிநவீன ஆவண வருடுபொறி (ஸ்கேனர்) வழங்கப்படும்.

**4. போக்குவரத்துத் துறையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு யுபிஎஸ் (10 KVA Capacity) வழங்குதல்.**

**Purchase of UPS (10 KVA Capacity) for Regional Transport Offices in Transport Department.**

போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர் உரிமம், வாகனப்பதிவு, அனுமதிச்சீட்டு, வரி மற்றும் இணைக்கக் கட்டணம் வசூலித்தல் தொடர்புடைய அனைத்து பணிகளும் கணினி மற்றும் மின்னாளுமையின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் போக்குவரத்துத் துறையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு யுபிஎஸ் வழங்குதல் அவசியமாகிறது.

எனவே, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூ.47.19 இலட்சம் செலவில் போக்குவரத்துத் துறையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு யுபிஎஸ் வழங்கப்படும்.

**5. கரூர் மாவட்டம் – மண்மங்கலம், திருவள்ளூர் மாவட்டம்– திருத்தணி, திருவண்ணாமலை மாவட்டம் – செய்யாறு மற்றும் மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி ஆகிய புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு 4 புதிய ஈப்புகள் வழங்குதல்.**

**Purchase of 4 New Jeeps for the newly formed Unit Offices at Manmangalam in Karur District, Tiruthani in Thiruvallur District, Cheyyar in Tiruvannamalai District and Usilampatti in Madurai District.**

பகுதி அலுவலகங்களுக்கு செயலாக்கப்பணி, களப்பணி, வரிவசூல் மற்றும் அன்றாடம் வசூலிக்கப்படும் அரசு வருவாயை அன்றைய தினமே கருவூல வங்கியில் செலுத்துவதற்கு வாகன வசதி வழங்க வேண்டியதன் அவசியத்தைக் கருதி ஏற்கெனவே இயங்கி வரும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது 2014–2015–ஆம் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மண்மங்கலம், திருத்தணி, செய்யாறு மற்றும் உசிலம்பட்டி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூ.33.13 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய ஈப்புகள் வழங்கப்படும்.

## 6. போக்குவரத்துத் துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சரக அலுவலகங்களுக்கு 16 வருடுபொறியுடன் (ஸ்கேனர்) கூடிய நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல்.

## Supply of 16 Copier with Scanner Machines for office of the Transport Commissioner and Zonal Offices.

போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் 3 இணைப் போக்குவரத்து ஆணையர்கள், 3 துணைப் போக்குவரத்து ஆணையர்கள், 3 உதவிச் செயலாளர்களுடன் 15 பிரிவுகள் இயங்கி வருகின்றன. மேலும் 12 சரக அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் கையாளப்படும் கோப்புகள் சம்பந்தமாக நகல் எடுக்கவும், ஒளிநகல் எடுத்து கோப்புகளை பத்திரப்படுத்தவும் 16 வருடுபொறியுடன் (ஸ்கேனர்) கூடிய நகலெடுக்கும் இயந்திரங்கள் வாங்குவது அவசியமாகிறது.

எனவே, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின்படி, ரூ.15.86 இலட்சம் செலவில் போக்குவரத்துத் துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சரக அலுவலகங்ளுக்கு 16 வருடுபொறியுடன் (ஸ்கேனர்) கூடிய நகலெடுக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

**பி. தங்கமணி**
தொழில் மற்றும்
போக்குவரத்துத் துறை அமைச்சர்